விலை: 40.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 109 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 24 வியாழக்கிழமை (07.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## போராடும் மக்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது

இலங்கையிடம் ஐ.நா.

07ஆம் பக்கம் பார்க்க


ஜனாதிபதியை பதவி விலகுமாறு

## பாராளுமன்றத்தால் கோரமுடியாது

சபாநாயகர் அறிவிப்பு

11ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியை பதவி விலகுமாறு வலியுறுத்தி எதிர்க்கட்சியினர் சபையில் ஆர்ப்பாட்டம்






(15 ஆம் பக்கம் பார்க்க)

எதிர்வரும் நாட்களில்

# உணவு தட்டுப்பாடு ஏற்படக்கூடும்

### பாராளுமன்றில் சபாநாயகர் மகிந்த யாப்பா எச்சரிக்கை



*(கொழும்பு)* நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சார தட்டுப்பாடுகளை தவிர நாட்டில் கடுமையான உணவு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். 15

## ஜனாதிபதி கோட்டா பதவி விலகமாட்டார்

சபையில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எந்தச் சந்தர்ப்பத்திலும் பதவி விலகமாட்டார் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளு 15

மக்களின் கோரிக்கையை ஏற்று

## ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும்

ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

"நாட்டு மக்களின் கோரிக்கைக்கமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உடனடியாகப் பதவி விலக வேண்டும்."

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க எம்.பி. 15

நாட்டின் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில்

# இடைக்கால ஜனாதிபதியாக ஹர்ஷ டி சில்வாவை நியமிக்குக

### பாராளுமன்றில் பரிந்துரை முன்வைப்பு



*(கொழும்பு)* நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இடைக்கால ஜனாதிபதியாக ஹர்ஷ டி சில்வாவை நியமிக்குமாறு பாராளுமன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அவரை 6 மாதங்களுக்கு அரச தலைவராக நியமிக்குமாறு சபையில் ஹரின் பெர்னான்டோ தெரிவித்தார். 15



## அடையாளம் தெரியாத மோ. சைக்கிள் குழுவால் அரச பயங்கரவாதம் மேலோங்கும்

### பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார

(கொழும்பு)

அடையாளம் தெரியாத மோட்டார் சைக்கிள் குழு பாராளுமன்றத்தை அண்மித்த பகுதிகளில் நடமாடுவதாகவும் இதன்மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் [illegible] மற்றும் பொதுமக்களின் உயிரை ஆபத்துக்குள் தள்ளி இருப்பதாகவும் [illegible] பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். 16

## ராஜபக்ஷ அரசு பிச்சை எடுக்கிறது

அசாத் சாலி

(கொழும்பு)

ஆட்சிக்கு வந்து மூன்று வருடமாகியும் எதுவும் செய்ய முடியவில்லை, அரசு இங்கே முழுக்க முழுக்க பிச்சை எடுக்கிறது 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## பாடசாலைகளுக்கு தவணை விடுமுறை

சகல அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணை நேற்றுடன் நிறைவுறுத்தப்பட்டு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளின் 2021 கல்வி ஆண்டின் மூன்றாம் தவணை கற்றல் செயற்பாடுகள் நாளை நிறைவடையவிருந்த நிலையில், இவ்வாறு முற்கூட்டிய விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வமாணிக்கம் எலிசபெத்



குளமன்கால் மல்லாகத்தை பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமாணிக்கம் எலிசபெத் நேற்று (06.04.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏணெஸ்ற்-அன்னம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற செல்வமாணிக்கத்தின் அன்பு மனைவியும் செல்வி சுபாஷினி (ஆசிரியை-யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), செல்வி எட்னா சுதர்சினி, செல்வன் அன்ரன் சுதர்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியரின் மருமகளும் ஸ்ரீதேவியின் மைத்துனியும் அனிஸ்ரனின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று பி.ப 2.00 மணிக்கு நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, குளமன்கால் புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

987, கடற்கரை வீதி, வளன்புரம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (10939)

தகவல்:
குடும்பத்தினர்

## அரசுக்கு எதிரான போராட்டத்தில்
# இளையோரது பேச்சை கேட்டு கண்ணீர் மல்கிய பொலிஸார்



(கொழும்பு)

இலங்கை டொலர் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் எரிவாயு, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் நிலவிவரும் நிலையில் விலைவாசியும் அதிகரித்துள்ளது.

இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

இந்நிலையில் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக சில நாட்களாக பாரிய ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றைய தினமும் அரசாங்கத்திற்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது இளையோரது பேச்சை கேட்டு பொலிஸார் கண்ணீர் மல்கும் சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம)

### அவசர நிலை, ஊரடங்கு, சமூக ஊடக முடக்கம்
# சர்வாதிகாரத்தை கொண்டு வருவதற்கான கொடூரமான முயற்சியே இது
### சபையில் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வு நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மூன்று முக்கிய கேள்விகளை எழுப்பினார்.


எதற்காக அவசரநிலை விதிக்கப்பட்டது? ஏன் ஊரடங்கு உத்தரவு? சமூக ஊடகங்கள் ஏன் முடக்கப்பட்டன? என்பதற்கான காரணத்தை கூறுமாறு சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பினார்.

நாட்டில் ஒரு சர்வாதிகாரத்தை கொண்டு வருவதற்கான ஒரு கொடூரமான முயற்சி இது என்றும் நீங்கள் தன்னிச்சையாக நடந்து கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை டொலர் நெருக்கடியை தீர்க்கவும் நாட்டை மீட்டெடுக்கவும் பண்டோரா ஆவணங்களில் பெயரிடப்பட்டவர்களின் பின்னால் சென்று பணத்தை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (ம)

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் கணபதிப்பிள்ளை
### (பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனம் - இலிகிதர்)



தோற்றம் 14.05.1947 — மறைவு 05.04.2022

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலை தற்காலிக வதிவிடமாகவும் ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் கணபதிப்பிள்ளை அவர்கள் கடந்த 05.04.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - நாகரத்தினம் தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற இராசையா - வராரிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும் காலஞ்சென்ற வீரலட்சுமியின் அன்புக் கணவரும் மாவலிவாணி (ஜேர்மனி), ஸ்கந்தமாவலி (ஜேர்மனி), தசறோகினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விசாகத்திலகர் (ஜேர்மனி), மஞ்சுளா (ஜேர்மனி), அருந்தவராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யோகேஸ்வரி, தங்கராசா (இலங்கை மின்சார சபை, மன்னார்), நேசராஜா, காலஞ்சென்றவர்களான சர்வேஸ்வரன், அன்னலட்சுமி மற்றும் யோகேஸ்வரன் (இந்தியா), செல்வராஜா (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவலிங்கம் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், கந்தையா, புவனேஸ்வரி, நாகலட்சுமி மற்றும் மகாலட்சுமி (ஜேர்மனி), செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் போஜன் (லண்டன்), கிஜிதன் (லண்டன்), வைஷ்ணவி (ஜேர்மனி), நர்மீபன் (லண்டன்), விபீஷன் (ஜேர்மனி), கவினா (ஜேர்மனி), பூமேனா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.04.2022) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (10938)

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 07[illegible] 283 5005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காணாமல் ஆக்கப்பட்ட
# மகனைத் தேடியலைந்த மேலும் ஒரு தாய் மரணம்

(வவுனியா)

காணாமல் ஆக்கப்பட்ட மகனைத் தேடி அலைந்த மேலும் ஒரு தாய் மரணமடைந்துள்ளார்.

வவுனியா செட்டிக்குளம் பகுதியை சேர்ந்த காளிமுத்து சுப்பம்மா (கமலா) என்பவரே தனது 69ஆவது வயதில் கடந்த திங்கட்கிழமை சுகயீனம் காரணமாக மரணமடைந்திருந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் காணாமல்போனோரின் உறவுகள் அன்னாரின் உருவப்படத்துக்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செய்ததுடன், மலர் அஞ்சலியும் செலுத்தியிருந்தனர்.

இவரது மகன் சுப்பையா சிவலிங்கம் 13.01.2000ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து இராணுவத்தால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கண்ணீர் அஞ்சலி



முன்னாள் கமக்கார அமைப்பின் செயலாளர் **நமசிவாயம்** அவர்களின் மகன்

## நமசிவாயம் டிலக்சன்

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமக்கார அமைப்பு (C-4135)
வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.


# வலுப்பெறும் போராட்டங்கள்...

## போர்க் காலத்தினை விட மோசமான நிலை

### மருத்துவர்கள், ஊழியர்கள் முல்லையில் போராட்டம்




## இலங்கையை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்




## கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவ மனையின் மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள் போராட்டம்





## அரசிற்கு எதிராக மன்னாரில் தனிநபர் போராட்டம்




## அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் வவுனியா மின்சாரசபை ஊழியர்கள்





### 74 வருட சாபக்கேட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்

## இலங்கை மின்சார சபை முன்றலில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம்




## மட்டக்களப்பில் பெண்கள் ஆர்ப்பாட்டம்



## மக்கள் வங்கி ஊழியர்கள் கொழும்பில் போராட்டம்






## பனிப்பொழிவின் மத்தியிலும் ஐ.நா.முன்றலில் கவனயீர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நி-5-100-316-250-285)

# ராஜஸ்தான் ரோயல்ஸை வீழ்த்தி பெங்களூர் அபார வெற்றி

ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிராக மும்பை வான்கடே விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் போட்டியில் றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் வெற்றிபெற்றது.

ராஜஸ்தான் றோயல்ஸினால் நிர்ணயிக்கப்பட்ட 170 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் 19.2 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

அணித் தலைவர் டுப்ளெசிஸ் (29), அனுஜ் ராவத் (26) ஆகிய இருவரும் 7 ஓவர்களில் 55 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். ஆனால், 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 5 விக்கெட்களை இழந்த பெங்களூர் 12.3 ஆவது ஓவரில் 87 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தது.

இந் நிலையில் ஷாபாஸ் அஹ்மதுடன் 7 ஆம் இலக்க வீரராக இணைந்த தினேஷ் கார்த்திக் 6 ஆவது விக்கெட்டில் 32 பந்துகளில் 67 ஓட்டங்களைப் பகிர்ந்து பெங்களூர் அணிக்கு நம்பிக்கை ஊட்டினர்.

கடைசி 2 ஓவர்களில் வெற்றிக்கு மேலும் தேவைப்பட்ட 12 ஓட்டங்களை 7 பந்துகளில் கார்த்திக்கும் ஹர்ஷால் பட்டேலும் பெற்றுக்கொடுத்து, இவ் வருட ஐ.பி.எல் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை முதல் தடவையாக தோல்வி அடையச் செய்தனர்.



முன்னதாக இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 20 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.

மொத்த எண்ணிக்கை 2 ஆவது ஓவரில் 6 ஓட்டங்களாக இருந்தபோது யஷஸ்வி ஜஸ்வால் (4) ஆட்டமிழந்தபோதிலும் ஜொஸ் பட்லர், தேவ்தத் படிக்கல், ஷிம்ரன் ஹெட்மியர் ஆகியோர் திறமையாகத் துடுப்பெடுத்தாடினர்.

மும்பை இண்டியன்ஸுடனான போட்டியில் சதம் குவித்த ஜொஸ் பட்லர். இந்தப் போட்டியிலும் திறமையாக துடுப்பெடுத்தாடி கடைசிவரை ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களைக் குவித்தார்.

37 ஓட்டங்களைப் பெற்ற படிக்கல்லுடன் 2 ஆவது விக்கெட்டில் 70 ஓட்டங்களைப் பகிர்ந்த ஜொஸ் பட்லர், பிரிக்கப்படாத 4 ஆவது விக்கெட்டில் ஷிம்ரன் ஹெட்மியருடன் மேலும் 83 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

ஷிம்ரன் ஹெட்மியர் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார், இதனிடையே அணித் தலைவர் சஞ்சு செம்சன் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார்.

பந்துவீச்சில ஹர்ஷல் பட்டேல் 18 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் டேவிட் வில்லி 29 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் வனிந்து ஹசரங்க டி சில்வா 32 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2552

### றொக்சன்

தானாக தன் தவறை உணராத எவரையும் நாமாக திருத்திட முடியாது. அப்படி முயற்சிப்பது கல்லிடம் கதை சொல்வதற்கு சமம்



### ஜெனோபி



பழைய அமைச்சரவை

புதிய அமைச்சரவை

### டானியேல்

கருவறையும் இருட்டு
கல்லறையும் இருட்டு
நடுவில் எதற்கு கரண்ட்டு
-இலங்கை மின்சார சபை-




### அனா



இரண்டு பக்கமும் புரிதல் இருந்தால் மட்டுமே அன்பு, பாசம், ஆசை எல்லாம் ஒரு பக்கம் மட்டு:மே இருந்தால் அது பெரும் தொல்லை

### பெர்கான்



"நம்பிக்கை"
நிறைந்த ஒருவன்
யார் முன்பும்
எப்போதுமே
மண்டியிடுவது இல்லை
-அப்துல்கலாம்-

### சுதாஜினி



என்னை மறந்த உறவுகளிடம்
நான் கேட்பது ஒன்று தான்
மீண்டும் என் வாழ்வில் வந்து
விடாதீர்கள்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டை விட்டு வெளியேறிய நிருபமா ராஜபக்ஷ

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நிருபமா ராஜபக்ஷ டுபாய் நோக்கிப் புறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அரசாங்கத்தின் பெருமளவான அமைச்சர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி கொழும்பில் உள்ள சொகுசு விடுதிகளில் குடும்பத்துடன் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



கடந்த சில நாட்களாக மக்கள் அரசாங்க அமைச்சர்களின் வீடுகளுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மருந்து இறக்குமதிக்காக உதவி வழங்குகிறது

## உலக சுகாதார ஸ்தாபனம்

(கொழும்பு)

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு உதவியாக வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் இணங்கியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த உதவியை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் ஒப்புக் கொண்டுள்ளது. இலங்கையில் மருந்து விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக அரசாங்கம் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இந்த உதவிக்கான கோரிக்கையை முன்வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (நி-5)


### பெயர் மாற்ற அறிவித்தல்

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த முருகேசு கௌசிகராஜன் (781093610V) ஆகிய நான் 07/04/2022 இன்று முதல் எனது பெயரினை கௌசிகதாசன் என பெயர் மாற்றம் செய்கின்றேன்.

இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் கௌசிகதாசன் எனும் பெயரையே பயன்படுத்துவேன் என்பதனை இத்தால் இலங்கை வாழ். சனநாயக குடியரசு மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
(10925) முருகேசு கௌசிகதாசன்



## 31 ஆம் நாள் நினைவு

அமரர்.திருமதி. பரராஜசிங்கம் மதுரைமீனாட்சி







தோற்றம் 22 . 11 . 1951

மறைவு 08 . 03 . 2022

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
என்றென்றும் ஒளி வீசும் அகல் விளக்கே
எம்மை விட்டு பிரிந்தாலும் பல நூற்றாண்டுகள்
எம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்
எம் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

(10923)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 20 – 05 – 1953



ஆண்டவன் திருவடியில் 30 – 03 – 2020

அமரர்.செல்வி. செல்லத்துரை கலாமதி

ஆண்டு இரண்டு உருண்டோடி மறைந்தது
ஆனால் உன் அன்பு முகம் மறையவில்லை –
கடைக்குட்டி தங்கை மதியே!
அழியாத உன் நினைவலைகள் என்றும் எம்
நெஞ்சை விட்டு அகலாது உம்
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல எம் குலதெய்வமாம்
ஞான வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்

உன் பிரிவை எண்ணி ஏங்கும் சகோதர, சகோதரிகள் மற்றும்
உற்றார், உறவினர்கள்.
இல.3, ஸ்ரான்லி கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (10930)


# இராசிபலன்

07.04.2022
பங்குனி 24, வியாழக்கிழமை
சஷ்டி முன்னிரவு 7.57 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 10.05 மணிவரை
சுபநேரம்- 7.38-9.08 மணிவரை
இராகுகாலம் -1.38-3.08 மணிவரை

சந்திராஷ்டமம்-
விசாகம், அனுசம்

வளவன்


மேஷம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.


கடகம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சற்று அலைச்சல்கள் ஏற்படலாம்.


துலாம்

தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.


மகரம்

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள்.


ரிஷபம்

சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


சிம்மம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


விருச்சிகம்

எடுத்த காரியங்களை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.


கும்பம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.


மிதுனம்

ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயமாகலாம், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலனில் கவனம் தேவை.


கன்னி

புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.


தனுசு

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு.


மீனம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

ஒன்றாக வழிபடும் குடும்பம் ஒருநாளும் பிரியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் இணைப்புக்களை வழங்குவதற்கான நடமாடும் சேவை

(புனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கு (Mul/90) கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கு புதிய நீர் இணைப்புகளை வழங்கும் நடமாடும் சேவையானது நாளை 8 மற் றும் 9 ஆம் திகதிகளில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று புதிய நீர் இணைப்புக்கான விண்ணப்ப படிவங்களை பொதுமக்களுக்கு வழங்கவுள்ளனர்.

விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளும் பொது மக்கள் அதனை பூர்த்தி செய்து கோரப்பட்ட ஆவணங்களுடன் எதிர் வரும் 21.04.2022 அன்று கள்ளப்பாடு தெற்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

மேலும் இது தொடர்பில் பொதுமக்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 021 228 3981 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (4-5-281)

# தொல்புரம் சிவபூமி முதியோர் இல்ல ஆண்டுவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்ல 15 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழா வும் இன்று 7 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெறும். மேலும் குறித்த முதியோர் இல்லத்திற்கு யா/மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம் நூலக மன்றம் நூலக வசதி ஒன்றையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலை. உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் தம்பதியர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-5)

# காவியநாயகன் திருப்பாடுகளின் காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் பிரமாண்டமான அரங்க ஆற்றுகையான "காவிய நாயகன்" திருப்பாடுகளின் நாடகம் இன்று 7 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு இல.238, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கும் வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கும் இவ்வாற்றுகை ஆரம்பமாகவுள்ளது.

இம்முறை பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலும் நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள் இவ்வாற்றுகையில் பங்கேற்கின்றார்கள்.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர். நீ.மரியசேவியர் அடிகளாரால் 2001 ஆம் ஆண்டில் முதன் முதலாக எழுதப்பட்ட "காவிய நாயகன்" திருப்பாடுகளின் நாடகம், "மனிதம்" என்ற தேடலுக்கு பதில் தரும் வகையில் அமைந்துள்ள இயேசுவின் வாழ்வில் அவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், கட்டத்தையும், சவாலையும் எவ்வாறு அணுகி மனிதத்தின் உச்சமாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கினார் என்பதைக் கூற முனைகின்றது. "காவிய நாயகன்" இதற்கு முன்னதாக 2001, 2004, 2008, 2013 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டது போது நெறியாள்கையை நீ. மரிய சேவியர்அடிகள், யோ.யோண்சன் ராஜ்குமார் ஆகியோர் மேற்கொண்டார்கள். இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்றத்தின் நாடகப் பொறுப்பாளரும் பெண் அரங்கக் கலைஞருமான வைதேகி செல்மர் எமில் மேற்கொண்டுள்ளார். (4-5)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சாரதிகள் முறுகல் நிலை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் பதற்ற நிலை ஏற்பட்டது.

வாகனத்திற்கு டீசல் பெற நீண்ட வரிசையில் காத்திருந்த சாரதிகள் மாலை ஆகியும் டீசல் வழுங்கப்படாததால் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

டீசல் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில் அதிகாலை தொடக்கம் தமது வாகனங்களை வரிசையில் விட்டு விட்டு காத்திருந்த சாரதிகளே ஏமாற்றமடைந்த நிலையில் தர்க்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவும் முற்பட்டனர்.

இந்நிலையில் சம்பவத்தை அறிந்த சாவகச்சேரி பொலிஸார் பதற்ற நிலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். (4-5-30).

# தற்காப்புக்கலை புதிய பிரிவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டில் ஆரம்பமான மகளிருக்கான 3 மாத கால இலவச தற்காப்புக்கலை (கராத்தே) பயிற்சி நெறி நிறைவடைந்துள்ளமையினால் புதிய பிரிவுகள் எதிர் வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

கலந்து கொள்ள ஆர்வமுள்ளோர் மற்றும் விண்ணப்பித்தோர் ஆண் பெண் இருபாலாரும் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணியளவில் கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (4-5)

# 'எங்கள் புலமை மரபின் பேராளுமை' கல்வியியல் பேராசிரியர் சந்திரசேகரம்

## பேராசிரியர் சண்முகலிங்கன் அஞ்சலி

எங்கள் புலமை மரபில் கல்வியியல் பேராளுமையாக நிமிர்ந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தின் பிரிவு நெஞ்சுக்கு கனமானது என யாழ்.பல்கலைமுன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அவர் அனுப்பிய அஞ்சலி செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞான கல்வித்துறைத்தலைவர், கல்வியியல் பீடாதிபதி,தேசிய கல்வி ஆணைக் குழு அங்கத்தினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை வளவாளர் என இலங்கை கல்வியியல் புல வளர்ச்சியில் அவரது பங்களிப்பு காத்திரமானது.

அவரிடம் பாடம் கேட்ட, அவரோடு கலந்துறவாடிய பொழுதுகளின் மகத்துவம் இணையிலாதது.அயராத தேடலுடன் அவர் எமக்களித்த சிந்தனைக் கருவூலங்களான நூல்கள் காலந்தோறும் எங்கள் கல்விப் பணிகளுக்கான கலங்கரை விளக்கமாகும்.

அவரது கல்வியியல் கனவுகள் மெய்ப்பட, குறிப்பாக மலையக பல்கலைக்கழகம் என்ற அவரது முன்மொழிவு வசப்பட அனைவரும் ஒன்றிணைந்து உழைப்பதே அவருக்கு உவப்பான அஞ்சலி என்பேன் என தெரிவிதார். (4-5)



உரும்பிராய் வடக்கு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக

# நடமாடும் சேவை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களமும் மத்திய அரசின் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களமும் இணைந்து நடமாடும் சேவை ஒன்றை எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்நாடமாடும் சேவையானது தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதுடன் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் குறித்த சேவையின் பொருட்டு ஆவணங்கள் கையளிக்க வேண்டியவர்கள் ஆவணங்களை அருகிலுள்ள பிரதேச செயலகங்களில் 28.04.2022 வரை கையளிக்க முடியும் என ஆணையாளர் சுஜீவா சிவதாஸ் அறிவித்துள்ளார். (4-5)

# எழுவைதீவில் கடற்படையினரால் காணி சுவீகரிப்பு முறியடிப்பு

(குப்பிழான்)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட எழுவைதீவு கிராமம் இறங்குதுறைப் பகுதியில் ஜே/39 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பெண்ணொருவருக்குச் சொந்தமான 53 பேர்ச் காணியை கடற்படையினரின் தேவைக்காக நில அளவை திணைக்களத்தினர் நேற்றுப் புதன்கிழமை காலை அளவீடு செய்வதற்கு மேற்கொண்ட முயற்சியை எழுவைதீவு மக்களும் தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதிக் கிளையினரும் இணைந்து முறியடித்தனர். மேற்படி காணியை அளவீடு செய்து சுவீகரிப்பதற்காக நில அளவை திணைக்களத்தினர் தீர்மானித்திருந்த நிலையில் இதனைத் தடுப்பதற்காக எழுவைதீவில் பொதுமக்களும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தீவகக் கிளையினரும் அப்பகுதியில் ஒன்று கூடியமையால் காணி அள வீடு செய்யும் திட்டத்தினைக் கைவிட்டு நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர். (4-5-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சி

# 2.4 % ஆக குறையும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி

**(கொழும்பு)**

**இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் 2.4 % ஆக குறையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி கணித்துள்ளது.**

இது கடந்த ஆண்டை விட 1.3 சதவீதம் சரிவாகும். 2021 இல், இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.7 சத வீதமாக இருந்தது.

கடன்கள், குறைந்த வெளி நாட்டு கையிருப்பு மற்றும் கொரோனா தொற்று ஆகியவை வீழ்ச்சிக்கு காரணம் என கூறப் படுகிறது.

இதேவேளை அடுத்த ஆண் டில் 2.5 % ஆக சிறிதளவு முன் னேற்றம் காணும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப் பிட்டுள்ளது. (நி-5)

# சால்வை அணியாது சபைக்கு வந்த சமல்

(கொழும்பு)

எப்போதும் சிவப்பு நிற சால் வையை அணிந்திருக்கும் முன் னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் சால்வை யின்றி சபையில் பிரசன்னமாகி யிருந்தார்.

சமல் ராஜபக்ஷவிடம் ஏற்பட்டி ருந்த இந்த மாற்றம் குறித்து பலரும் பேசிக் கொண்டனர்.

சமல் ராஜபக்ஷ பாராளு மன்றத்தில் ஆளும் கட்சியின் முன் வரிசையில் நான்காவது ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

இதனிடையே, சால்வை அணியாதது குறித்து ஊடகவிய லாளர்கள் குழு அவரிடம் கேள்வி எழுப்பிய போது, "சால்வையால் பயனில்லை. எனக்கு ஆடை வேண்டும்" என சமல் ராஜபக்ஷ கூறியதாக தெரி விக்கப்பட்டுள்ளது. (நி-5)

# மின்வெட்டு நேரங்களில் சமிக்ஞைகள் இயங்காது

## மக்களே! புகையிரதக் கடவைகளில் அவதானம்

(கொழும்பு)

மின்வெட்டு நேரங்களில் புகையிரத கடவைகளை பயன் படுத்தும் போது மிக அவதான மாக இருக்குமாறு புகையிரத திணைக்களம் வாகன சாரதி களையும் பாதசாரிகளையும் எச்சரித்துள்ளதாக ரயில்வே அத்தியட்சகர் (போக்குவரத்து) ஏ.டி.ஜி.செனவிரத்ன தெரிவித் துள்ளார்.

மின்வெட்டு நேரங்களில் புகையிரத கடவைகளில் சமிக் ஞைகள் இயங்காது.

மின்வெட்டு நேரங்களில் சமிக்ஞைகளுக்கு மின் கலங் கள் பயன்படுத்தப்பட்டாலும் அவை குறிப்பிட்ட நேரத்தி ற்கு மட்டுமே பயன்படுத்த முடிவதாக சுட்டிக் காட்டியுள் ளது.

எனவே மக்கள் புகையிரத கட வைகளில் மிகுந்த அவதான த்து டன் பயணங்களை மேற்கொள்ள வேண்டுமென வும் அவர் தெரி வித்தார். (நி-5)

# பாடசாலை நேரத்தில் மாற்றம்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுப் பரவல் அத்துடன் ஏற்பட்ட பொருளாதார நெருக் கடியால் பாடசாலைகள் சுமார் 2 வருடங்களுக்கு மேலாக இயங்கவில்லை.

இதனால் மாணவர் களின் கல்வி நடவடிக்கை கள் பெரிதும் பாதிக்கப்பட் டன.

இந்நிலையில், இம் மாதம் 18 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் பாடசாலை யின் புதிய தவணையிலி ருந்து பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் நீடிக்க கல்வி அமைச்சு தீர்மா னித்துள்ளது.

இதேவேளை, இவ்வாண் டுடன் (2022) தொடர்புடைய பாடத்திட்டங்களை உள்ள டக்குவதற்கு 139 நாட்கள் வரையறுக்கப்பட்ட கால அவகாசம் காணப்படுவ தால், பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் நீடிப்பதன் மூலம் இதற்கு தீர்வு வழங்க முடியும் எனத் தெரி விக்கப்படுகிறது.

மேலும் குறித்த காலப்ப குதிக்குள் பாடத்திட்டத்தை உள்ளடக்க முடியாத பட்ச த்தில், மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கையின் போது, சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்துவது குறித்தும் கல்வியமைச்சு கவ னம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# போராடும் மக்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடாது

## இலங்கைக்கு ஐ.நா. சபை அறிவுரை

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொரு ளாதார நெருக்கடி கார ணமாக மக்கள் தெருக்களில் இறங்கி போராடி வருகி றார்கள்.

இது தொடர்பாக ஐ.நா. சபை இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப் பதாவது.

இலங்கை நிலவரத்தை நாங்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். விலைவாசி உயர்வை எதிர்த்து போராட்டம் நடத்தும் மக்கள் மீது தாக் குதல் நடத்துவது சரியான செயல் அல்ல.

படைகள் அப்படி அத்துமீறி நடந்து கொள்ளக் கூடாது. கோப த்தில் இருக்கும் மக்களிடம் சுமுகமான முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

அதன்மூலம் பிரச்சினை களைத் தீர்க்க முன்வர வேண் டும்.

எதிர்க்கட்சிகள் மக்களிடம் போரா ட்டத்தை தூண்டிவிட செய்யக்கூடாது. அமைதியை ஏற்படுத்த அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண் டும்.

இவ்வாறு ஐ.நா.சபை அறிவுறுத்தி யுள்ளது. (நி-5)


மணிவிழா வாழ்த்து




திருமதி.இராஜேஸ்வரி விஜயநாதன் (SLPS-I)

எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றிவரும் திருமதி.இராஜேஸ்வரி விஜயநாதன் (SLPS-I) இன்று (07.04.2022) வியாழக்கிழமை தனது 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்கிறார். இவரை வாழ்த்துவதோடு இவருடைய பணி மேலும் சிறக்கவும் நீண்ட ஆயுளோடு நலமாக வாழவும் இறைவனை வேண்டுகின்றோம்.

சேவை விபரம்

| | |
|---|---|
| • கிளி/கறுக்காய்தீவு அ.த.க.பாடசாலை | 06.08.1988-31.12.1989 |
| • ஆசிரியர் பயிற்சி கலாசாலை | 01.01.1990-31.12.1991 |
| • கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை | 01.01.1992-29.2.2003 |
| அதிபராக நியமனம் (3) | 01.06.1993 |
| • கிளி/பல்லவராயன்கட்டு இ.த.க. | 01.03.2003-10.05.2005 |
| • கிளி/கிளிநொச்சி ம.வி. | 11.05.2005-31.12.2005 |
| • கிளி/மத்திய கல்லூரி | 01.01.2006-16.09.2007 |
| • கிளி/சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலை | 17.09.2007-03.01.2016 |
| அதிபர் சேவை தரம் | 01.07.2008 |
| • கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை | 04.01.2016-06.04.2022 |

வாழ்த்துவோர்:-

ஆசிரியர் நலன்புரிக் கழகம், (கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை 2021

செல்வி. அ.தாரகா

(151 புள்ளிகள்)

வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று புலமைச் சாதனை படைத்த செல்வி.அ.தாரகா அவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் மாணவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை சமூகம்,
போக்கட்டி அ.த.க.பாடசாலை,
கொடிகாமம்.


(10934)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## முகநூல் தரிசனம் 14

# பொழைக்க தெரிஞ்சவன் பொழைச்சுக்குவான்



இஞ்சினியரிங் படிச்சிட்டு ரொம்ப நாள் வேலை கிடைக்காத ஒரு இளைஞன், மருத்துவர் ஆகிடலாம் என்று கிளினிக் ஒன்றைத் திறந்தார்.

வாசலில் ஒரு போர்டு எழுதினார்.

"எந்த வியாதியாக இருந்தாலும் 500 ரூபாவில் குணப்படுத்தப்படும்.

உங்கள் வியாதி குணமாகவில்லையெனில் 1000 ரூபாவாகத் திருப்பி தரப்படும் "

இதைக் கவனித்த வேலையில்லா மருத்துவர் ஒருவர் இந்தப் போலி மருத்துவரிடம் இருந்து 1000 ரூபாவை பறிக்க உள்ளே சென்றார்.

" டாக்டர், என் நாக்குல எந்த சுவையும் உணர முடில .."

" நர்ஸ் அந்த 23 ஆம் நம்பர் பாட்டில்ல இருக்குற மருந்தை இவர் வாயில மூணு சொட்டு விடுங்க" என்றார் மருத்துவர்.

நர்ஸ் அவர் வாயில் மருந்தை விட்ட பிறகு,

"அய்யோ டாக்டர் இது பெட்ரோல் ஆச்சே" என்று அலறினார்.

"வெரி குட். இப்ப உங்க taste நல்லா வேலை செய்ய ஆரம்பிச்சிடுச்சு உங்களுக்கு எல்லா சுவையையும் உணர முடிகிறது

500 ரூபாய் காசை எடுங்கள் "

உண்மையான டாக்டர் வேற வழி இல்லாமல் 500 ரூபாவைத் தந்து விட்டு வெளியேறினார்.

ஆனாலும் ஆயிரம் ரூபாவை பெறும் முயற்சியைக் கைவிடவில்லை..

சில நாட்கள் கழித்து மீண்டும் அந்த கிளினிக்கிற்கு சென்றார்.

" டாக்டர் எனக்கு மறதி ரொம்ப ஜாஸ்தியாருக்கு குணப்படுத்துங்க" என்றார்.

"நர்ஸ் அந்த 23 ஆம் பாட்டிலைத் திறந்து இவர் வாயில மூன்று சொட்டுக்கள் விடுங்க" என்றார் போலி மருத்துவர்.

"அய்யோ டாக்டர் அது பெட்ரோல் ஆச்சே" என்று கத்த..

"வெரி குட் உங்க மெமரி பவர் நல்லாய்டுச்சு 500 ரூபா எடுங்க"

இந்த முறையும் ஏமாந்து போன மருத்துவர்

சில நாட்கள் கழித்து மீண்டும் வந்தார் .

"எனக்கு கண் பார்வை சரி இல்லை .மருந்து தாங்க டாக்டர்"

"சாரி இதுக்கு என்கிட்ட மருந்து இல்லை இந்தாங்க ஆயிரம் ரூபாய்" என்று ரூபாய் நோட்டை நீட்டினார் இஞ்சினியர் டாக்டர்

"இது 500 ரூபாய் நோட்டாச்சே" என்று பதற

"வெரிகுட் உங்க பார்வையும் நல்லாய்டுச்சு

எடுங்க 500 ரூபாய் "

பொழைக்க தெரிஞ்சவன் எப்படியும் பொழைச்சுக்குவான்...

படிப்பாவது...கிழிப்பாவது ......

# ஐக்கிய நாடுகள் பாது

# ரஷ்யாவை உடனடி

## உக்ரைன் கே

(பிரஸ்ஸல்ஸ்)

**ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி செ கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஐ.நா.பாதுகாப்புச் சபை யின் கூட்டத்தில் நேற்று முன் தினம் காணொளி மூலம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, உக்ரைனில் ரஷ்ய படைகளினால் மேற் கொள்ளப்படும் நடவடிக்கை கள் குறித்து, பாதுகாப்புச் சபைக்கு அவர் விளக்கமளித்துள்ளார்.

இதன்போது, ரஷ்ய படையினால், உக்ரைனியர்கள் கொல்லப்பட்டும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டும் வருகின்ற நிலை

யில், ர

உள்ளா

வலி யு

இதே

அனை

களைய

செய்ய

# போதைப் பொருள் வைத்திருந்ததால்

## இஸ்ரேல் நாட்டு பெண்மணிக்கு மரண தண்டனை



(ஜெருசலேம்)

ஐக்கிய அரபு அமீரகத்தில் கொக்கைன் போதைப்பொருள் வைத்திருந்த இஸ்ரேல் நாட்டு பெண்மணிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் புகைப்பட ஸ்ரூடியோ நடத்தி வந்த ஃபிடா கிவான் கடற் தாண்டு வேலை நிமித்தமாக டுபாய் சென்றுள்ளார்.

ஒரு வாரத்துக்குப் பின், பிடா கிவான் தங்கி இருந்த வீட்டை பொலிஸார் சோதனையிட்ட போது 500 கிராம் கொக்கைன் போதைப்பொருள் இருந்ததால் அவர் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதனை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்து உள்ளார். ( நி-5

# உக்ரைனுக்கு 100 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஏவுகணைகளை வழங்க அமெரிக்கா ஒப்புதல்

(வோஷிங்டன்)

உக்ரைன் அரசாங்கத்திற்கு 500 மில்லியன் டொலர்களை நேரடி பட்ஜெட் உதவியாக வழங்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்ததாக வெள்ளை மாளிகை ஏற்கனவே அறிவித்திருந்தது.

ரஷ்யா- உக்ரைன் இடையே போர் 40 நாட்களுக்கும் மேலாக தொடர்கிறது. உக்ரைனின் பல்வேறு நகரங்களும் பேரழிவை சந்தித்துள்ளன. பொதுமக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், உக்ரைனுக்கு உதவும் வகையில், அமெரிக்கா முழு ஆதர அளிக்கும் என்று தெரிவித்தது. அத படி,மேற்படி அறிவித்தல் வெளிய னது.

ரஷ்ய படையை எதிர்த்துப் போரா ஏவுகணைகளை வழங்கும்படி உ ரைனிய இராணுவத்தினர் உத கோரினர்.

இந்நிலையில், 100 மில்லிய அமெரிக்க டொலர் மதிப்பிலா ஏவுகணைகளை உக்ரைனுக்கு வ ங்க ஜோ பைடன் ஒப்புதல் அளித் ள்ளதாக நிர்வாக அதிகாரி ஒருவ தெரிவித்துள்ளார். (நி-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ாதுகாப்பு சபையில் இருந்து ...னடியாக நீக்க வேண்டும்

## ...கோரிக்கை

### ...யில் இருந்து ரஷ்யாவை நீக்க ...தி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி



...யில், ரஷ்யா பொறுப்புக் கூறலுக்கு உள்ளாக வேண்டும் என அவர் வலி யுறுத்தியுள்ளார்.

இதேநேரம், ரஷ்யாவில் அனைத்து புதிய முதலீடு களையும், அமெரிக்கா தடை செய்ய உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜி-7 நாடுகள் உட்பட ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து இந்த நடவடிக்கையை அமெரிக்கா எடுக்க உள்ளதாக வெளிநாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிட த்தக்கது. (நி-5)

## குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை உக்ரைனில் அதிகரிப்பு



(கீவ்)

ரஷ்ய படையெடுப்பு கார ணமாக உக்ரைனில் குறை ந்தது 167 குழந்தைகள் கொல்லப்பட்டதாகவும், 279 பேர் காயமடைந்துள்ளதாக வும் உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஷெல் மற்றும் குண்டு வீச்சு காரணமாக சுமார் 927 பாடசாலைகள் மற்றும் பிற கல்வி நிலைய கட் டடங்கள் சேதமடைந்து ள்ளன என்றும் தெரிவிக்க ப்பட்டுள்ளது.

கிழக்கு உக்ரைனின் டோனெட்ஸ்க் பகுதியில் அதிக எண்ணிக்கையில் குறிப்பாக சுமார் 81 குழ ந்தைகள் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து கீவ் பகுதியில் 78 குழந்தைக ளும் கார்கிவ் பிராந்தியத்தில் 64 குழந்தைகளும் உயிரி ழந்துள்ளதாக உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்து ள்ளனர். (நி-5)

## ...ால் ...டனை

...ல் கொக் ...த்திருந்த ...ணிக்கு ...கப்பட்டு

...ளுடியோ ...ன் கடந் ...க டுபாய்

...கிவான் ...லிஸார் ... கிராம் ...ள் இரு ...ய்யப்பட்


... மரண ...அதனை ...டு செய்ய (நி-5)

## திருட்டுப்போன டார்வின் எழுதிய நோட்டுகள் 22 ஆண்டுகளின் பின் கிடைத்தன

(லண்டன்)

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்ற பரிணாம கொள்கையால் இன்றளவும் புகழ்பெற்றிருப்பவர், விஞ் ஞானி சார்லஸ் டார்வின். இவர் கைப்பட எழுதிய 2 நோட்டு புத்தகங்கள், அவர் படித்த இங்கிலாந்து நாட்டில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்க லைக்கழகத்தில் பாதுகாக்க ப்பட்டுவந்தன.

ஆனால், அவர் புத்த கங்கள் 22 ஆண்டுகளுக்கு முன்பாக அங்கிருந்து திரு ட்டுப்போய் விட்டன. இவ ற்றை எடுத்தவர்கள் திரும் பத்தந்துவிடுமாறு உலக ளாவிய வேண்டுகோளை 15 மாதங்களுக்கு முன்பு விடுத்தது.



இந்நிலையில், அந்த நோட்டு புத்தகங்கள், அவை வைக்கப்பட்டிருந்த அசல் நீலப்பெட்டி, வெற்று பழுப்பு நிற உறை ஆகியவற்றை இளஞ்சிவப்பு பரிசுப்பையில் யாரோ கேம்பிரிட்ஜ் பல்க லைக்கழகத்தில் விட்டு விட்டு சென்றுள்ளனர்.

அதை விட்டுச்சென்ற வர்கள், அந்த பல் கலைக்கழகத்தின் நூல கருக்கு, ஈஸ்டர் நல்வாழ்த்து களையும் தெரிவித்து ள்ளனர். (நி)

## ...ுள்ள ...புதல்

... ஆதரவு ... அதன் ...வெளியா

... போராட ...படி உக் ... உதவி

...ல்லியன் ...பிலான ...க்கு வழ ...அளித்து ... ஒருவர் (நி-5)

## டுவிட்டரின் பங்குதாரரானார் எலான் மஸ்க்



(வோஷிங்டன்)

உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒரு வரான எலான் மஸ்க் டுவிட்டர் நிறுவனத்தின் 9.2 சதவீத பங்குகளை சமீபத் தில் வாங்கியுள்ளார்.

ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா நிறுவனங்களின் தலைமை நிறைவேற்று அதிகாரியான எலான் மஸ்க், உலகின் முதல் நிலை பணக்காரராக இருக்கிறார்.

உலகம் முழுவதும் டெஸ்லா தயாரிப்பான மின் னணு காருக்கு பிரத்தியேக வரவேற்பு உண்டு. இந் நிலையில், டுவிட்டர் நிறுவனத்தின் 9.2 சதவீத பங்குகளை எலான் மஸ்க் சமீபத்தில் வாங்கியதை அடு த்து டுவிட்டர் நிறுவனத்தில், 7.3 கோடி பங்குகள் இவர் வசமாகின.

இந்நிலையில் தற்போது டுவிட்டர் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி பராக் அகர்வால் மஸ்கிற்கு வாழ்த்து தெரி வித்துள்ளார். (நி-5)

## உக்ரைன் மனிதப் படுகொலைகளுக்காக ரஷ்யா தண்டிக்கப்பட வேண்டும்

### மேற்குலகு வலியுறுத்தல்

(வோஷிங்டன்)

உக்ரைனில் நிகழ்த்தப் பட்டதாக கூறப்படும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்பான ரஷ்யா அதற்குரிய தண்ட னைகளை அனுபவிக்க வேண்டும். அதற்குரிய நட வடிக்கைகள் எடுக்கப்படும் என அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உறுதி யளித்துள்ளன. அத்துடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மிருகத்தனமானவர் என வர்ணித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், புடினுக்கு எதிரான போர் க்குற்ற விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

உக்ரைனில் ரஷ்யப் படைகளிடம் இருந்து மீண்டும் கைப்பற்றப்பட்ட புச்சா நகரில் பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டறியப் பட்டன.

இந்நிலையில் புச்சா விற்கு விஜயம் செய்த உக் ரேனிய ஜனாதிபதி வோலோ டிமிர் ஜெலென்ஸ்கி, இவை போர்க்குற்றங்கள் மற்றும் உலகத்தால் இனப்படு கொலையாக அங்கீகரிக்க ப்பட வேண்டும் என கோரி க்கை விடுத்தார்.

எனினும் புச்சா உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்கள் கொலை தொடர்பான குற்ற ச்சாட்டுகளை ரஷ்யா மறுத் துள்ளது. ரஷ்ய படைகள் அட்டூழியங்களில் ஈடுபட வில்லை என ஐக்கிய நாடு கள் சபைக்கான ரஷ்ய தூதர் வாசிலி நெபென்சியா தெரி வித்துள்ளார்.

ஆனால் இனப்படு கொலைக் குற்றச்சாட்டை உறுதியாக வலியுறுத்தும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலெ ன்ஸ்கி, இந்த கொலைகள் ரஷ்யாவுடனான அமைதிப் பேச்சுவார்த்தை முயற்சி களைக் கடினமாக்கியுள்ள தாகத் தெரிவித்தார்.

உக்ரைனில் நிகழ்த்தப் பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்பான ரஷ்யா அதற்குரிய தண்ட னைகளை அனுபவிக்க வேண்டும் என அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இனப்படுகொலை தொட ர்பில் வெளிவரும் ஆதார ங்கள் ரஷ்யா மீது மேலும் கடுமையான பொருளாதாரத் தடைகள் தேவை என்ப தைக் காட்டுகின்றன என வும் இந்நாடுகள் தெரிவித்து ள்ளன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டீசல் வழங்க மறுப்பு

# பேருந்துகளை வீதியில் நிறுத்தி சாரதிகள் போராட்டம்



(குருமன்காடு)

வவுனியாவில் நேற்று எரிபொருள் வழங்குவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக சாரதிகள் போராட்டத்தில் ஈடுபட்டமையினால் ஏ9 வீதியூடான போக்குவரத்து சுமார் 45 நிமிடங்கள் வரை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஈரப்பெரியகுளம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு டீசலை பெற்றுக் கொள்வதற்காக வாகனங்கள் காத்திருந்த போது டீசல் நிறைவடைந்துள்ளதாக எரிபொருள் நிலையத்தினர் தெரிவித்தனர்.

டீசல் இருந்த போதிலும், தற்போது டீசல் நிறைவடைந்து விட்டதாக எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் கூறுவதாக தெரிவித்து சாரதிகள் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக ஏ9 வீதியின் குறுக்கே இரு பேருந்துகளை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு ஈரப்பெரியகுளம் பொலிஸார் உடனடியாக வருகை தந்து எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளருடன் கலந்துரையாடியதையடுத்து அத்தியாவசிய தேவைகளுக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த 2500 லீற்றர் டீசல் வாகனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனையடுத்து போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டமையடுத்து ஏ9 வீதியின் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது. (4-5-250)

## இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு 25 ஆயிரம் ஏக்கரில் சிறுபோகம்

(கண்டாவளை)

சேதனப் பசளையினை முழுமையாக பயன்படுத்தி சிறுபோக பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு அதி உச்ச பயனைப் பெறும் வகையில் மாவட்ட அளவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட த்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளம் உள்ளிட்ட குளங்க ளின் கீழ் இவ்வாண்டு 25 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் பாதிக்காத வகையில் விவசாயிகளுக்கான எரிபொருளை வழங்குவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட தான அறிவுறுத்தலுக்கு அமைய செயற்படும் அதே வேளை சேதனப் பசளை ஊடாக சிறுபோக பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு அதிஉச்ச பயனைப் பெறும் வகையில் மாவட்ட அளவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (4-5-315)

## ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா, குருமன்காடு பகுதியில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே 10 கிராம் ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 31 மற்றும் 21 வயது இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-5-250)


## கேள்வி அறிவித்தல்
## நெடுந்தீவு பிரதேச சபை
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) -2022

01. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) 2022 நிதி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டத்திற்கு கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், உள்ளூர் அதிகாரப் பெறுகைக்குழு, நெடுந்தீவு பிரதேச சபை, அவர்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி வேலை அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு பெற்றிருத்தலும் வேண்டும்.

05. தகைமைத் தேவைப்படுத்தல்கள் கேள்வி ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் கேள்வி ஆவண அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதான வீதி, நெடுந்தீவு, (தொலைபேசி: 021 221 5211) இல் இருந்து 07.04.2022 தொடக்கம் 21.04.2022 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

07. மேற்கூறிய இடத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் 07.04.2022 ஆம் திகதியிலிருந்து 21.04.2022 திகதிவரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர், நெடுந்தீவு பிரதேச சபை, பிரதான வீதி, நெடுந்தீவு எனும் முகவரிக்கு 21.04.2022 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 18.04.2022 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதீப்பீடு செலவு (VAT தவிர்ந்த) மில்.ரூபாவில்) | ஒப்பந்த காலப் பகுதி | தேவைப் படும் தரம் | விலைமனுவை சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலப்பகுதி | | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் காலப்பகுதி | திகதி | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| 1 | NP/14/41 (7)/02/ /PSDG/ 2022/01 | ஐக்கிய தீம்பெரிய துறை வீதி புனரமைப் பு.கட்டம்-I | 4.25 | 90 நாட்கள் | C8/C7 | 77 நாட்கள் | 07.07.2022 | 43,000.00 | 05.08.2022 |

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைக்குழு,
நெடுந்தீவு பிரதேச சபை,
07.04.2022

(C-4131)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 250 | 220 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 250 | 600 |
| தக்காளி | 140 | 120 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 100 | 100 |
| கோவா | 100 | 90 | 100 | 120 |
| கரட் | 160 | 240 | 200 | 250 |
| பூசணி | 50 | 70 | — | 100 |
| புடோல் | 180 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 55 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 240 | 240 | 100-250 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 210 | 200 | 250 |
| பாகற்காய் | 350 | 400 | 280 | 250 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 380 | 360 | 250 | 250 |
| லீக்ஸ் | 160 | 140 | 150 | 200 |
| பீற்றூட் | 120 | 160 | 120 | 200 |
| கறிமிளகாய் | 200 | 150 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 1000 | 1200 |
| போஞ்சி | 250 | 250 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 200 | 140 | — | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 | 80 |
| தேசிக்காய் | 160 | 120 | 180 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-85 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 180 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 200 | — | 300 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | — | — | — | — |

# ஜனாதிபதியை பதவி விலகுமாறு

# பாராளுமன்றத்தால் கூற முடியாது

## சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவை பதவி விலகுமாறு பாராளுமன்றத்தினால் கோரிக்கை விடுக்க முடியாது என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி பதவி விலகுவது, புதிய ஜனாதிபதியை பாராளுமன்றத்தின் ஊடாக நியமித்தல் அல்லது இடைக்கால அர சாங்கத்தை அமைப்பது குறித்த யோசனை முன் வைக்கப்பட்டது.

எவ்வாறாயினும் அதற்கான அரசியலமைப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை என சபாநாயகர் கட்சித் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பதால், பாராளுமன்ற பெரும் பான்மையுடன் தீர்மானத்தை நிறைவேற்றி ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க முடியும் என கட்சித் தலைவர்கள் சுட்டிக் காட்டினர்.

எவ்வாறாயினும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டாலும் 52 நாள் ஆட்சிக்கவிழ்ப்பின் போது உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை சுட்டிக்காட்டி ஜனாதிபதி தீர்மானத்தை புறக்கணிக்க முடியும் என சபாநாயகர் பதிலளித்தார்.

மேலும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஜனநாயக வழிகளில் தீர்க்க வேண்டும் என்றும் ஜனாதிபதியை தெரிவு செய்த மக்களே அவர் தொடர்பாக முடிவெடுக்க வேண்டும் என்றும் சபாநாயகர் தெரி வித்தார்.

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு கட்சிகள் ஒன்றிணைந்து தீர்வை உருவாக்குமாறு ஜனா திபதி அழைப்பு விடுத்தபோதும் இடைக்கால அரசாங்கத்திற்காக அரசாங்கத்துடன் கைகோர்க்க எதிர்க் கட்சிகள் மறுப்புத் தெரிவித்துவிட்டன.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பத்து பேர் உட்பட 42 பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் சுயாதீனமாகச் செயற்படவுள்ளதாக அறிவித்ததை அடுத்து அரசாங்கத்தின் பாராளுமன்ற பெரும்பான்மை ஆட்டம் கண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி 2022

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016 (1) ற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பு. கட்டட நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
05. தேவையானதகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை** (Schedule) **கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழ வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை 07.04.2022 ஆம் திகதியில் இருந்து 28.04.2022 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் இடத்திலிருந்து 07.04.2022 ஆம் திகதியிலிருந்து 28.04.2022 ஆம் திகதி வரையுள்ள வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 29.04.2022 ஆம் திகதி பி.ப 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் வலி.கிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 20.04.2022 ஆம் திகதி பி.ப.14.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. மேற்படி கேள்வி கோரல் தொடர்பில் வலி.கிழக்கு பிரதேச சபையின் பெறுகை குழுவின் முடிவே இறுதியானது. பெறுகை குழுவின் முடிவு தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
12. **கேள்வி ஆவணங்களை வழங்கும் போது கொரோனா** (COVID -19) **வைரஸ் தொற்றுத் தொடர்பான சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும், கேள்வி ஆவணங்களை பெறவரும் போது கூட்டமாக வருவதை தவிர்த்து ஒருவர் மட்டும் வருகை தர வேண்டும், சுகாதார முற்பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வருகை தர வேண்டும்.**

| இல | ஒப்பந்த இலக்கம | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம். |
| 01 | NP/14/41 (13)/2/ PSDG/1/ 2022 | சங்கமம் வீதி மிகுதி வேலை திருத்தம், கோப்பாய் | 2.77 | 90 நாட்கள் | C8 அல்லது அதற்கு மேல் | 27,670/- | 29.07.2022 |

**தியாகராசா நிரோஷ்**
**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்.**

**யாழ்ப்பாணம்**
**வடமாகாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி சபாநாயகரின் பதவி விலகல்

# ஜனாதிபதியால் நிராகரிப்பு



(கொழும்பு)

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் இராஜி னாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்க மறுத்துள்ளார்.

மேலும், அவரை தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் இரு க்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# எந்தவொரு அமைச்சுப் பதவியையும்

## ஏற்கப் போவதில்லை – மைத்திரி தரப்பு

(கொழும்பு)

எந்தவொரு அமைச்சுப் பத வியையும் ஏற்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முக்கிய சந்திப் பொன்று இடம்பெற்றது.

இதன் போதே ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவிற்கு இது குறித்து அறிவிக்கப்பட்டதாக கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# குழந்தைக்கு பால்மா வாங்க முடியாததால்


## விபரீத முடிவெடுத்த தந்தை

(பொகவந்தலாவ)

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு காரணமாக தனது குடும்பத்தை வாழ வைக்க முடியாது எனத் தெரிவித்து பொகவந்தலாவ நகருக்கு அருகில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் இருந்து குதித்து தற்கொலைக்கு முயன்ற ஒரு பிள்ளையின் தந்தை பொகவந்தலாவ பொலிஸாரால் தொலைத் தொடர்பு கோபுரத்தில் இருந்து கீழே இறக்கப்பட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் சுமார் ஒரு வயதுடைய தனது குழந்தைக்கு பால் மா கூட வாங்க முடியாத நிலையிலேயே தற்கொலைக்கு முயன்றதாக அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு ள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

# முகமூடி ஆள்!



(நேற்றைய தொடர்ச்சி)

பிறகு அவன் வெளியே போய் வாசல் கதவை முன் புறம் தாளிட்டு விட்டுப் போய் விட்டான். அத்தம்பதிகளின் சொத்து திருட்டுப் போனது கண்டு நான் மிகவும் மனம் வருந் தினேன். நான் முன் பின் யோசிக்காமல் கதவைத் திறந்ததால் தானே திருடன் வீட்டினுள் வந்தான்! நான் திறக்காது இருந்திருந்தால் அவர்களுக்கு இந்த நட்டம் ஏற்பட்டிராதே என்று எண்ணினேன்.

நான் அத்தம்பதிகளிடம் மன்னிப்புக் கேட்கப் போனேன். அவர்களோ "ஐயோ! உங்களால் எங்கள் உயிர் தப்பியது. நீங்கள் மட்டும் அவசரப்பட்டு அவனைப் பிடிக்க முயன்றிருந்தால் அவன் எங்கள் இருவரையும் கொன்றிப்பான்" என்றார்கள். மறுநாள் காலை, நான் அங்கிருந்து என் ஊருக்கு வந்தேன். நான் என் தாயாரிடம் நடந்ததைக் கூறவே அவளும் மனம் இளகி அத்தம்பதிகளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கச் சொன்னாள். நானும் பணத்தோடு கிளம்பிச் சென்றேன்.

நான் அவர்களது வீட்டை அடையும் போது இருட்டி விட்டது. ஆனால் இருட்டில் அங்கு முன் கண்ட முகமூடித் திருடன் இருப்பது கண்டு ஆச்சரியப்பட்டு நான் ஒரு மரத்தின் பின் மறைந்து நின்றேன். சற்று நேரத்திற்குப் பின் சித்திரக் குள்ளப் பெண் அவனைக் காண வந்தாள். அவனிடம் ஏதோ ரகசியம் பேசி விட்டு அவள் வீட்டினுள் சென்றாள். எனக்கு எல்லாம் புரிந்து விட்டது. அந்த முகமூடி மனிதன் அவர்களுடைய கையாள் என்றும் அந்த வீட்டுக்கு வரும் பயணிகளை ஏமாற்றிப் பணம் பிடுங்குகிறார்கள் என்றும் புரிந்து கொண்டேன். மறு நிமிடமே நான் ஓடி வாசல் கதவை தட்டப் போன முகமூடி மனிதனின் கழுத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டேன். அவன் மயங்கி விழுந்தான். அவனது முகமூடியை எடுத்து நான் அணிந்து கொண்டு கத்தியை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு கதவைத் தட்டி "தம் பித்துரை வந்திருக் கிறேன்" என் றேன்.

அறுபது வயதான ஒரு கிழவர் வந்து கதவைத் திறந்து "தம் பித் துரையா நீ? உன் அக்கா உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்" என்றார். ஆனால் என் வேஷத்தைக் கண்டு பயந்து நடுங்கிக் கீழே விழுந்து விட்டார்.

அன்றிரவு அந்த வீட்டில் தங்க வந்த பயணி அவர். இதற்குள் சித்திரைக் குள்ளப் பெண் ஓடி வந்து "தம்பித்துரையா வந்தான்?" என்று கேட்டாள். நான் சட்டெனக் கத்தியை அவள் கழுத்தின் மீது வைத்து "எங்கே உன் கணவன்?" என்று கேட்கவே அவள் மிரளமிரள விழித்தாள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




தன் தம்பியும், தாயார் மூவரும், சுமந்திரனும், குகனும் ஒரே படகில் ஏறிச் சென்றனர்.

குகன் கோசலையைத் தொழுது நோக்கி, "இவர் யார்?" என்று வினவினான்.

'தசரதன் முதல் தேவி, இராமன் தாய்; அவனைப் பெற்றதால் அடைந்த செல்வத்தை யான் பிறந்ததால் இழந்த பெரியாள்' என்றான் பரதன்.

அடுத்துச் சுமித்திரையை அறிமுகம் செய்தான். "இராமனுக்குப் பின் பிறந்தான் என்னும் பெருமைக்குரிய இலக்குவனைப் பெற்றெடுத்த பெருமை உடையவள் இவள் என்றான். அடுத்துக் கைகேயியை அறிமுகம் செய்தான். "இத் துன்பங்களுக்கெல்லாம் காரணமாய் நின்றவள்; பழி வளர்க்கும் செவிலித் தாய்; இவள் குடலிலே கிடந்து பாவம் செய்தவன் நான்; இந்த உலகம் களை இழந்து, உயிர்ப்பு அடங்கி இருப்பதற்கு இவள்தான் காரணம்; இந்நிலையில் இடரே இல்லாத முகத்தினை உடையளாய் இவள் இருக்கிறாள் என்றால், இவளே என்னை "ஈன்றவள்" என்றான்.

தாய் என்பதால் இரக்கமற்ற அவளையும் குகன் கையெடுத்து வணங்கினான். தோணியை விட்டு இறங்கிய தாயார் மூவரும் சிவிகையில் ஏறினர்.

குகனோடு பரதன் காலால் நடந்தான். அனைவரும் பரத்துவாசர் இருப்பிடத்தை அடைந்தனர். அவர் இவர்களை இன்முகம் காட்டி வரவேற்றார்.

### திருவடி சூட்டிய வரலாறு

பரத்துவாசர், 'ஆள்வதை விட்டுக் காட்டுக்கு வந்தது ஏன்?' என்றார். 'மாள்வதற்கு வழி தேடி வந்துள்ளேன்; முறை தவறி எனக்குத் தந்த ஆட்சியை நிறை மனத்தோடு இராமன் ஏற்றுக்கொள்ள வேண்டுதற்காக வந்தேன்; அவன் ஏற்றுக் கொள்ளாவிட்டால் யான் மாள்வது உறுதி' என்றான் பரதன்.

முனிவர் மனம் குளிர்ந்தது; சேனையையும்; மற்றவர்களையும் வரவேற்று உபசரித்தார். அன்று இரவு அவர்கள் அங்கு தங்கி இருந்தனர்; பொழுது விடிந்ததும் மறுநாள் பாலை வன வழியைக் கடந்து, அனைவரும் சித்திர கூடம் நோக்கிச் சென்றனர். சேய்மையிலேயே பரதன் சேனையோடு வருவதை இலக்குவன் கண்டான்; அவன் மீது ஆத்திரம் கொண்டான்; குகனைப் போலவே அவனும், பரதன் படை கொண்டு தாக்க வந்திருக்கிறான், என்று தவறாய் நினைத்தான்.

அவனை ஆற்றுவது இராமனுக்கு அரும்பாடு ஆயிற்று.

"நம் குலத்து உதித்தவர் இதுவரை தவறே செய்ததில்லை. அறம் நெகிழ்ந்தது இல்லை. பரதன் நீதி நெறியினின்று நிலை குலையான். அவன் இங்கு வருவது ஆட்சியைத் தரவே தவிர மாட்சிமை நீங்கிப் போரைத் தொடுக்க அல்ல" என்று விளக்கினான்.

படையை நிறுத்தி விட்டுப் பரதனும் தன் தம்பி சத்துருக்கனனோடு முந்திச் சென்றான். இறந்த தந்தையை எதிர் கண்டது போலப் பரதன் இராமனைச் சந்தித்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகவே.. படைகள் எழுகவே
விடியவே.. இரவு விடியவே
ஆட்டம் போட்ட சவட்டம் இங்கு
ஆட்டங் காணப் போகுது. –கவிப்பேரரசு வைரமுத்து

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் தமிழ் மண்ணில் கிழிக்கப்படாத முகமூடிகள்

அழிந்துபோன இலங்கை. காரணம் என்ன? என்று தமிழகத்து இணையத்தளமொன்று செய்த விமர்சனம் கண்டு ஒரு கணம் திகைத்துப் போனேன்.

அழகாபுரி என்ற இலங்கைத் தீவு உலகின் சொர்க்காபுரியாக இருந்திருக்க வேண்டும்.

ஆம், எல்லா இன மக்களும் ஒற்றுமையாக வாழுகின்ற சூழமைவு ஏற்படுத்தப்பட்டிருக்குமாயின் பின்லாந்து நாட்டுக்கு இணையாக இலங்கையும் இருந்திருக்கும்.

என்ன செய்வது இனவாதத்தையும் மதவாதத்தையும் முதலீடாகக் கொண்டு அரசியல் நடத்திய சிங்களப் பேரினவாதிகளால் இலங்கை அழிந்து போனது.

தவிர, இலங்கையின் இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? என்பது பற்றிய விமர்சனங்களுக்கும் ஊடகப் பரப்பில் பஞ்சமில்லை.

இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது நடத்திய மிக மோசமான யுத்தமே அந்த நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டது என்பர்.

இன்னும் ஒரு தரப்பு குடும்ப ஆட்சியால் நேர்ந்த அவலம் இது என்கின்றனர்.

இன்னுமொரு தரப்பு அறிவியலிலும் பொருளாதாரத்திலும் பலமுள்ள தமிழ்ச் சமூகத்தை ஓரங்கட்டியதால் ஆன துன்பம்தான் இது என்பர்.

எதுஎவ்வாறாயினும் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்துக்காக இலங்கை அரசாங்கம் தன்னிடம் இருந்த சொத்துக்களையெல்லாம் பரிநாசம் செய்தபோது சிங்களத் தரப்புகள் மௌனமாக இருந்தன.

அதேநேரம் குடும்ப ஆட்சி, ஜனநாயகத்தை வேரறுக்கும் என்பதைத் தெரிந்து கொண்டும் ராஜபக்ஷ குடும்பத்தை ஜனாதிபதியாக – பிரதமராக–நிதியமைச்சராக–நீர்ப்பாசன அமைச்சராக – விளையாட்டுத்துறை அமைச்சராக நியமித்தபோது அரச பங்காளிக் கட்சிகள் மௌனமாக இருந்தமை ஏன்? என்ற கேள்வியும் எழவே செய்யும்.

ஆம், ஈழத் தமிழர்களை வதைப்பதற்கும் தமிழ் இனம் மேலெழ முடியாமல் தலையில் அடித்து அமர்த்துவதற்கும் ராஜபக்ஷ குடும்பம் தேவையாக இருந்தது.

ஆனால் இப்போது எரிபொருள், எரிவாயு மின்சாரம் இல்லை, உணவுப் பொருட்களின் உச்சவிலையில் அவற்றை வாங்க முடியவில்லை என்பதால், ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியை வெளியேற்றப் போராட்டம் நடக்கிறது.

பரவாயில்லை, எங்கள் சிங்களச் சகோதரர்கள் ஓர் உண்மையை உணர்ந்தாக வேண்டும்.

அதாவது பாராளுமன்ற வளாகத்துக்கு வெளியில் நீங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது நான்கு மோட்டார் சைக்கிள்களில் எட்டு ஆயுததாரிகள் முகத்தை மூடி மறைத்தவாறு இராணுவ சீருடையில் சென்றபோது, அவர்களை இடைமறித்த பொலிஸார் முகமூடிகளைக் கிழித்து யார்? என்று இனங்காட்டினர்.

அன்புக்குரிய சிங்கள மக்களே! உங்கள் முன்னிலையில் நம்பர் தகடு இல்லாத மோட்டார் சைக்கிள்களில் ஆயுதப்படை வந்ததெனில், யுத்த காலத்தில் எங்கள் தமிழ் மண்ணில் இந்த நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை நீங்கள் கற்பனை செய்ய அதனை ஒரு சாட்சியாக எடுத்துக் கொள்ளுங்கள்.

என்ன செய்வது, உங்கள் பொலிஸார் எங்கள் மண்ணில் அவர்களின் முகமூடிகளைக் கிழிக்க மறுத்ததால் எங்களில் எத்தனையோ பேர் அவலச் சாவடைந்தனர் என்ற உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்.

## இலங்கை வழியாக கடத்தப்படவிருந்த ரூ.15 கோடி பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்பு

(கொழும்பு)

தூத்துக்குடி அருகே முள்ளிகாடு கடற்கரைப் பகுதியிலிருந்து இலங்கை வழியாக வளைகுடா நாட்டிற்கு கடத்தப்படவிருந்த 15 கோடி ரூபாய் மதிப்பிலான 5 பாக்கெட்டுகளில் தடைசெய்யப்பட்ட ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட படகை தேசிய வருவாய் புலானாய்வுத் துறையினர் பறிமுதல் செய்துள்ளதோடு தப்பி ஓடிய படகு ஓட்டியை தேடி வருகின்றனர்.

தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்கள் உள்ளிட்டவை கடல் வழியாக இலங்கை, மாலைதீவு உள்ளிட்ட பகுதிகளுக்கும், வெளி நாடுகளுக்கும் சட்ட விரோதமாக கடத்தப்பட்டு வருகின்றன.

மெரைன் பொலிஸார், க்யூ பிரிவு பொலிஸார், மத்திய வருவாய்ப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டும், கடத்தப்படும் போதைப் பொருட்களை பறிமுதல் செய்தும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ம)

## ஜனாதிபதியே பதவி விலகவேண்டும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்ல

### சபையில் இரா.சாணக்கியன்

(கொழும்பு)

பதவி விலக வேண்டியது 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்ல, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவே என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை பதவி விலகுமாறு கோரி எதிர்க் கட்சியினர் பாராளுமன்றில் நேற்று போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ர்ாஜபக்ச பாராளுமன்றத்தில் திடீரென வருகை தந்ததாகவும் எனினும் சபைக்குள் வரவில்லை எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் ஆர்ப்பாட்டத்தின் போதே சாணக்கியன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தினை கலைக்கும் நோக்குடனேயே ஆளும் தரப்பினர் பாராளுமன்றத்தில் செயற்பட்டு வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

எனினும் பதவி விலக வேண்டியது 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் அல்ல, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவே என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம)

## வழி கேட்பதுபோல் பாசாங்கு செய்து தொல்புரத்தில் பெண்ணின் தங்கச் சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சாத்திரம் சொல்லும் இடத்திற்கு வழி கேட்பது போல் பாசாங்கு செய்து பெண்மணி ஒருவரின் தங்க சங்கிலியை இருவர் அறுத்து சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் தொல்புரம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குறித்த பெண்மணி அவ்விடத்தில் நின்றபோது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் வாழை இலைகள் சிலவற்றுடன் வந்த இருவர், அப் பகுதியில் சாத்திரம் சொல்பவர் எவரேனும் உண்டோ என கேட்டுள்ளனர். அதற்கு அப்பெண்மணி விலாசம் சொல்ல முற்பட்ட போது, மோட்டார் சைக்கிளின் பின்பகுதியில் இருந்தவர் அப்பெண்மணியின் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு இருவரும் தப்பியோடியுள்ளனர்.

கொள்ளையர்களால் அறுக்கப்பட்ட தங்க சங்கிலி 2 பவுண் என பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (ம-33)

## பிரதமர் இராஜினாமா செய்துவிட்டாரா?

### சபையில் விஜித ஹேரத் கேள்வி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பிரதமரிடம் கேள்வி ஒன்றை கேட்டிருந்ததாகவும் அதற்கு பதிலளிக்க பிரதமர் பாராளுமன்றத்திற்கு வரவில்லை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பிரதமரிடம் கேட்ட கேள்விகளுக்கு ஏன் பதிலளிக்க இடமளிக்கவில்லை என விஜித ஹேரத், சபாநாயகரிடம் கேட்டார். அத்துடன் நேற்று (நேற்று முன்தினம்) பிரதமர் பாராளுமன்றத்தில் இருந்தார் எனவும் இன்று (நேற்று) அவர் இராஜினாமா செய்துள்ளாரா என்பதை அறிந்துகொள்வது அவசியம் எனவும் அவர் கூறினார்.

இதற்கு பதிலளித்த சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, இந்த கேள்விக்கு பதிலளிக்கும் தரத்திற்கு பாராளுமன்றம் தரம் தாழ்ந்து போக தேவையில்லை எனக் கூறினார்.

இதனையடுத்து சபை முதல்வருக்கும் எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் சூடான வாக்குவாதம் ஏற்பட்டது. (ம)

## நாட்டில் தங்கத்தின் விலை வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் தங்க விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

செட்டியார் தெருவின் இன்றைய நிலைவரப்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 190,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், 22 கரட் தங்கம் பவுண் ஒன்று, 175,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த வாரத்தில் 24 கரட் தங்கம், பவுண் ஒன்று 200,000 ரூபாய்க்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாத சம்பளம் வழங்க தடை இல்லை

(கொழும்பு)

ஏப்ரல் மாதத்திற்கான சம்பளம் தொடர்பில் அரச ஊழியர்களுக்கான முக்கிய அறிவிப்பொன்று வெளியாகியுள்ளது.

அதன்படி ஏப்ரல் மாதத்திற்குரிய சம்பளத்தை வழங்குவதில் எவ்வித தடையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை அரச சேவைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை, பொருட்களின் விலையேற்றம் என்பவற்றை கண்டித்தும், அரசாங்கத்திற்கு எதிராகவும் இலங்கையில் பல பகுதிகளில் மக்கள் பாரிய போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த சில நாட்களாக ஜனாதிபதி மற்றும் பிரதமரின் இல்லங்கள், அமைச்சர்களின் இல்லங்கள் மக்களால் முற்றுகையிடப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பான குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்)

35

### வடக்கு மாகாணம் நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்களின் கட்டமைப்பு

வடக்கு மாகாணத்தில் நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்களின் கட்டமைப்பு பற்றிய தகவல்கள் அட்டவணை (L5) இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை (L5): நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்களின் கட்டமைப்புவடக்கு மாகாணம்

| பிரதேசம் | பிரதேச செயலகப் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | மாநகர சபை | நகர சபை | பிரதேச சபை |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 15 | 435 | 01 | 3 | 13 |
| கிளிநொச்சி | 4 | 95 | - | - | 3 |
| மன்னார் | 5 | 153 | - | 1 | 4 |
| வவுனியா | 4 | 102 | - | 1 | 4 |
| முல்லைத்தீவு | 6 | 136 | - | - | 4 |
| வட மாகாணம் | 34 | 921 | 01 | 5 | 28 |

வடக்கு மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை, வாக்கெடுப்பு பிரிவு மற்றும், வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை என்பன அட்டவணை (L6) இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை (L6): வாக்கெடுப்பு பிரிவுகளின் அமைப்பு -2017
வடக்கு மாகாணம்

| பிரதேசம் | பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் | வாக்கெடுப்பு பிரிவு | வாக்கெடுப்பு மாவட்டம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 555,210 | 11 | 629 |
| வன்னி | 273,707 | 3 | 351 |
| வட மாகாணம் | 828,,917 | 14 | 980 |

தேர்தல் பணிகளுக்காக வடக்கு மாகாணம் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி என இரண்டு தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களைக் கொண்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டம் யாழ்ப்பாணமாவட்டத்தின் தேர்தல் பிரிவாக எடுத்துக்கொள்ளப்பட்டது. வன்னி தேர்தல் மாவட்டம் மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிர்வாக மாவட்டங்களைக் உள்ளடக்கியுள்ளது.

### யாழ்ப்பாண மாவட்டம் பற்றிய தகவல்கள்

யாழ்ப்பாண மாவட்டம் வடக்கு அகலாங்கு 9° 27' மற்றும் 9° 50' க்கும் கிழக்கு நெட்டாங்கு 79°31' மற்றும் 80° 37' க்கும் இடையில் 1025 சதுர கிலோ மீற்றர் பரப்பில் அமைந்துள்ளது. மாகாணத்தின் மொத்த நிலப் பிரதேசத்தில் 11.5% இல் வியாபித்துள்ள இந்த மாவட்டம் 929 சதுர கிலோ மீற்றர் நிலப் பிரதேசத்தையும் 96 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீரப் பரப்பையும் கொண்டுள்ளது. உள்ளக நீர்ப்பரப்புக்கள் மொத்த மாவட்ட நிலப்பரப்பில் 9.4% ஐ மூடியுள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் மேற்குத் திசைகளால் கடலையும் தெற்குத் திசையால் கிளிநொச்சி மாவட்டம் மற்றும் யாழ்ப்பாணக் குடாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இந்த மாவட்டத்தின்48 சதுர கிலோ மீற்றர் அதாவது மொத்தப் பரப்பில் 4.7%, 2010 ஆம் ஆண்டில் வனப் பிரதேசமாகக் காணப்பட்டது.இம்மாவட்டத்தின் உயரம் கடல் மட்டத்திலிருந்து - 2 மீற்றர் தொடக்கம் +15 மீற்றர் வரை உயர்ந்து செல்கின்றது.


**1025 சதுர கிலோ மீற்றர் பரப்பில் அமைந்துள்ளயாழ்ப்பாண மாவட்டம் வட. மாகாணத்தின் மொத்த நிலப் பிரதேசத்தில் 11.5% இல் வியாபித்துள்ளது. இந்த மாவட்டம் 929 சதுர கிலோ மீற்றர் நிலப் பிரதேசத்தையும் 96 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர்ப் பரப்பையும் கொண்டுள்ளது. சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) பிரகாரம், மொத்தச் சனத்தொகை 583,882 ஆகவும் சனத் தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 629 ஆகவும் காணப்பட்டது.**

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) பிரகாரம், மொத்தச் சனத்தொகை 583,882 ஆகவும் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 629 ஆகவும் காணப்பட்டது. 10 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு 98.2 % ஆகும். இம்மாவட்டத்தின் யாழ்ப்பாணம் தலைநகராக காணப்படுகிறது. இது கொழும்பிலிருந்து 303 கிலோ மீற்றர் நேரடித் தூரத்தில் உள்ளது.

2016 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களினுள் 1608 கி.மீ. நீளத்திற்கு வீதிகள் அமைந்துள்ளன.யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (51%) அதைத்தொடர்ந்து விவசாயத் துறையில் (25%) மற்றும் கைத் தொழிற் துறையில் (24%) ஆகும்.

### யாழ்ப்பாண மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபட்டுள்ள விதம் அட்டவணை (M1) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய, மாவட்டத்தின் பெரும்பான்மை மக்கள் இலங்கைத் தமிழர்கள் ஆவர். அது மொத்த மாவட்ட சனத்தொகையில் 98.9% வீதமாகும். ஏனைய இனத்தவர்கள்1.1% ஆகும். இந்து பக்தர்கள் 82.8% ஆகும். அடுத்து உரோமன் கத்தோலிக்கர்கள் 12.9% ஆகும்.




அட்டவணை (M1): இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு
யாழ்ப்பாண மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | % | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 2,284 | 0.4 | பௌத்தம் | 2,168 | 0.4 |
| இலங்கைத் தமிழர் | 577,338 | 98.9 | இந்து | 483,255 | 82.8 |
| இந்தியத் தமிழர் | 1,807 | 0.3 | இஸ்லாம் | 2,363 | 0.4 |
| இலங்கை முஸ்லிம் | 2,162 | 0.4 | உரோமன் கத்தோலிக்கம் | 75,474 | 12.9 |
| வேறு | 291 | - | ஏனைய கிருஸ்தவம் | 20,511 | 3.5 |
| | | | வேறு | 111 | - |
| மொத்தம் | 583,882 | 100 | மொத்தம் | 583,882 | 100 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

மன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதிக்கு 69 இலட்சம் பேர் வாக்களித்துள்ளனர் என்பதை லக்ஷ்மன் கிரியெல்ல எமது அமைப்பாளருக்கு நினைவுபடுத்துகின்றார். ஜனாதிபதி ஒரு போதும் பதவி விலகமாட்டார் என்பதை அரசாங்கம் என்ற விதத்தில் நாங்கள் தெளிவாகக் கூறுகின்றோம். இதற்கு நாங்கள் முகம் கொடுப்போம் என தெரிவித்தார். (ம)

## உணவு...

நேற்றுக் காலை பாரா்ளுமன்றம் ஆரம்பமாகி விசேட உரையொன்றை ஆற்றிய போதே சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பல அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் சிறப்புரிமைகளை பாதுகாப்பவர் என்ற வகையில் இதனை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு பாராளுமன்றத்தின் ஊடாக ஜனநாயக ரீதியில் தீர்வு காண முடியும் என தெரிவித்த சபாநாயகர், இந்த வார இறுதிக்குள் அரசியலமைப்பின் பிரகாரம் இந்த நெருக்கடியை சமாளிப்பதற்கான பொதுவான திட்டத்தை வகுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார். (ம)

## ஜனாதிபதியை...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை பதவி விலகுமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியினர் பாராளுமன்றத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த விவாதத்தின்போதே இவ்வாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இதனை அடுத்து பாராளுமன்றம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. (ம)

## ஜனாதிபதி உட...

வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"நாட்டு மக்கள் கொந்தளித்துள்ள நிலையில், அதனைச் சமாளிப்பதற்காக அமைச்சரவையில் அமைச்சர்கள் அனைவரும் இராஜினாமா என்ற நாடகம் அரங்கேற்றப்படுகின்றது. இது மக்களுக்கும் தெரியும்.

கோட்டா அரசால் முன்வைக்கப்படும் இடைக்கால அரசு, இடைக்கால சர்வகட்சி அரசு என்பவற்றை ஏற்பதற்கு எமது கட்சி தயார் இல்லை. கோட்டாபய ராஜபக்சவும், அரசும் பதவி விலக வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கை. அதனை இந்த அரசு செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்த பின்னர் அடுத்தகட்டம் பற்றி தீர்மானம் எடுக்கலாம். அதற்கான உரிய திட்டம் எம்மிடம் உள்ளது" என்றார். (ம)

## இடைக்கால...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஹரின் பெர்ணாண்டோ, அடுத்த ஓராண்டிற்கு தாம் வேதனத்தை பெறாமல் பணியாற்றுவதாக கூறியுள்ளமை சமூக வலைத்தளங்களில் வரவேற்பை பெற்றுள்ளது.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

மக்கள், பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் ஒரே மாதிரியாகவே பார்க்கின்றனர். அனைவரும் திருடர்கள் என்றே அவர்கள் கருதுகின்றனர். எனினும் இரண்டு பக்கங்களிலும் நல்லவர்களும் இருக்கின்றார்கள். ஏன் எமக்கு தற்போது இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

எம்மால் குழுவாக ஒன்றிணைய முடியாதுள்ளது. மக்கள் வீதிகளில் மரணிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. கோட்டாபய ராஜபக்ச பதவி விலகினால், என்ன செய்வது? யார் ஆட்சியை வழிநடத்துவது? அரசியலமைப்பில் அதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

இடைக்கால அரச தலைவரை நியமிக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவரும் நிலையில், தேர்தலை நடத்த முடியுமா? அனைவரும் ஒன்றிணைவது, முதலாவதாக நடைபெற வேண்டிய ஒன்று.

அந்த ஒன்றிணைவு என்பது உளமார்ந்ததாக இருக்க வேண்டும். இது எனது தனிப்பட்ட கருத்து. ஆறு மாதங்களுக்கு ஹர்ஷ டி சில்வாவிடம் அரச தலைவர் பதவியை கையளியுங்கள். எமது தலைவர் அரச தலைவர் பதவியை கோரப் போவதில்லை. அதன்பின்னர் தேர்தலை பார்ப்போம்.

நாட்டிற்கு ஏதாவது செய்யும் ஒருவர் வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் நன்மதிப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் செய்ய வேண்டிய ஒன்று உள்ளது. எனக்கு ஒருவருடத்திற்கு சம்பளம்வேண்டாம்.

நான் யோசனை ஒன்றை முன்வைக்கின்றேன். சிற்றுண்டிச்சாலையில் நான் உணவருந்த மாட்டேன். நாம் மாற்றமொன்றை கொண்டுவர வேண்டும். மக்களின் எதிர்ப்பை சம்பாதிக்காமல் இருப்பதற்கு செய்ய வேண்டிய விடயங்கள் உள்ளன.

மக்கள் துன்பத்தில் இருக்கும்போது இவ்வாறு இரண்டரை இலட்சம் சலுகையை பெறுவதில் எந்தவொரு பயனும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (ம)


அத கோடிபதி — செவ்வாய்க்கிழமை — சீட்டிழுப்பு இல: 1531 — சீட்டிழுப்பு திகதி: 2022.04.05 — ரூ. 4,563,640/- — வெற்றி இலக்கங்கள்: 34 38 57 74 Y

அத கோடிபதி — புதன்கிழமை — சீட்டிழுப்பு திகதி: 2022.04.06 — சீட்டிழுப்பு இல: 1532 — வர்ணம்: இளஞ்சிவப்பு — ரூ. 1,763,740/- — வெற்றி இலக்கங்கள்: 04 06 09 61 B

சனிதா — செவ்வாய்க்கிழமை — சீட்டிழுப்பு திகதி 2022.04.05 — சீட்டிழுப்பு இல: 3866 — ரூ.3,130,940/- — வெற்றி இலக்கங்கள்: 24 65 68 75 N

சனிதா — புதன்கிழமை — சீட்டிழுப்பு திகதி: 2022.04.06 — சீட்டிழுப்பு இல: 3867 — வர்ணம்: ஊதா — ரூ.1,553,260/- — வெற்றி இலக்கங்கள்: 32 41 63 67 S

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு திகதி 06/04/2022 — சீட்டிழுப்பு இலக்கம் 1233 — வெற்றி இலக்கங்கள்: மிதுனம் 9 9 1 1 5 2

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1705 — நிறம் இள நீலம் — சீட்டிழுப்பு திகதி 2022/04/05 — தினம் செவ்வாய் — H 12 50 62 63 — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூபா 56,423,041/-

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1706 — நிறம் செம்மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2022/04/06 — தினம் புதன் — B 20 42 54 72 — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூபா 56,492,029/-

மெகா பவர் — சீட்டிழுப்பு திகதி 06/04/2022 — சீட்டிழுப்பு இலக்கம் 1076 — Q 21 01 06 32 66

சசிரி — சீட்டிழுப்பு வாரம் 156 — சீட்டிழுப்பு திகதி 05.04.2022 — செவ்வாய்க்கிழமை — வெற்றி இலக்கங்கள் 02 29 35 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,084,160/-

ஜயோதா — சீட்டிழுப்பு வாரம் 1826 — சீட்டிழுப்பு திகதி 2022/04/06 — வெற்றி இலக்கங்கள் 09 33 42 67 S — எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 33,286,204/- — தொ. பே.: 0112 333 546/47 — Web: www.dlb.lk

தன நிதானய — திகதி - 2022.04.06 — சீட்டிழுப்பு இலக்கம் - 759 — S 08 43 56 73

ராசி அதிர்ஷ்டம் — திகதி 2022-04-05 — சீட்டிழுப்பு வாரம் 3417 — வர்ணம் சிவப்பு — சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/- — வெற்றி இலக்கங்கள் 18 32 46 60 மிதுனம் — 8 5 6 0 6 1 3 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,281,420/-

ராசி அதிர்ஷ்டம் — திகதி 2022-04-06 — சீட்டிழுப்பு வாரம் 3418 — வர்ணம் பச்சை — சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/- — வெற்றி இலக்கங்கள் 24 51 57 62 கன்னி — 1 5 5 8 3 7 0 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,128,720/-

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு திகதி 2022/04/06 — சீட்டிழுப்பு இலக்கம் 4727 — Q 5 3 5 1 3 4

லக்ன — சீட்டிழுப்பு வாரம் 881 — திகதி 2022.04.05 — M 30 10 23 67 68

லக்ன — சீட்டிழுப்பு வாரம் 882 — வர்ணம் பச்சை — திகதி 2022.04.06 — புதன்கிழமை — D 25 07 12 62 73 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 229,335,751/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் தற்போதைய நிதியமைச்சர் யார்?

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிதியமைச்சர் யார் என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

நாட்டில் தற்போது நிதியமைச்சர் ஒருவர் இல்லை. இரு நாட்களுக்கு முன் நிதியமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டார். நியமிக்கப்பட்டதும் பாராளுமன்றத்திற்கு வந்து அறிக்கை எதனையோ முன்வைத்தார்.

அதன் பின்னர் பதவி விலகினார். பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடந்துகொண்டிருந்த போது நிதியமைச்சின் செயலாளர் பதவி விலகினார். இப்படியான நிலைமையில், நாட்டின் நிதியமைச்சர் யார் என்பதை நாங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

யார் திறைசேரியின் செயலாளர்? அவர்கள் இல்லாத நிலையில் நாடு அராஜக நிலைக்கு சென்றுள்ளது. நாடு வீழ்ச்சியடைந்துள்ளது. நாட்டின் நிதி முகாமைத்துவத்தை எப்படி கையாள்வது. இவற்றுக்கு பதில் தேவை எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம)


### உதவியாளர் தேவை

யாழ்.நகரில் உள்ள கிளினிக் ஒன்றுக்கு பகுதி நேரமாக பணியாற்றக்கூடிய பெண் உதவியாளர் தேவை. (C-4133)

தொடர்பு:-
077 375 4490
077 220 2769

### பணியாளர்கள் தேவை

கைத்தொலைபேசி நிலையத்திற்கு பணியாளர்கள் தேவை.
விற்பனையாளர் / திருத்துனர்கள் } வயது: 19 - 20 வரை / சம்பளம் - 30,000/=
வெஸ்ரேன் மொபைல்
யாழ்ப்பாணம். 077 486 6479 (10935)
நேரில் வரவும். 8 am to 9 am

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
### ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10913)
076 825 7716 (ஆகாஸ்)

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 45 பரப்புக் காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)
- மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை.
- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் - பூநகரி பிரதான வீதியில் (A32) இலிருந்து 200m தூரத்தில்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 2½ Km தூரம் (A9)
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி (நல்ல சூழல்)
- 16 அடி பாதையுடன்

ஒரு பரப்பின் விலை - 3 இலட்சம் மட்டும் (300,000) (10928)
074 291 3725, 074 291 3726, 074 291 3727

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 100 தென்னைகள் உள்ளன.

தரகர் தேவையில்லை (10937)
பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
ஒரு பரப்பின் விலை ரூ.450,000
ஜெயம் -
077 814 7389


### அடையாளம்...

திரிபோலி இராணுவ முகாமில் இயங்கியவர்கள் இப்படியான மோட்டார் சைக்கிளில் சென்றே ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்தனர்.

மிரிஹான சம்பவத்தின்போது இப்படியான அடையாளம் தெரியாத மோட்டார் சைக்கிள் குழு சென்றிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியில் செல்லும் நேரத்தில் இப்படியான அடையாளம் தெரியாத நபர்கள் வந்து துப்பாக்கி பிரயோகம் செய்து விட்டு போகலாம் அல்லது அப்பாவி பொதுமகன் ஒருவர் மீதும் துப்பாக்கிச் சூட்டை நடத்தலாம்.

இவர்கள் முகங்களை மூடிக் கொண்டு வந்திருந்தனர். பொலிஸ் அதிகாரியான வெத்தசிங்க என்பவர் இவர்களை நிறுத்தினார். மோட்டார் சைக்கிளின் சாவியை எடுத்துக் கொண்டார். முகமூடியை கழற்ற முயன்றார். அதனைச் செய்ய விடவில்லை.

தற்போது அந்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக விசாரணை நடத்த முயற்சித்து வருகின்றனர். இராணுவ தளபதி, பொலிஸ் மா அதிபரை தொடர்பு கொண்டு இது குறித்து விசாரிக்குமாறு கூறியுள்ளார்.

இராணுவ தளபதிஎப்படி இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட முடி

பொருளியல் நிபுணர்கள் அடங்கிய

# ஜனாதிபதி ஆலோசனை குழு கோட்டாவால் நியமனம்

(கொழும்பு)

பலதரப்பு விவகாரங்கள் மற்றும் கடன் நிலைத்தன்மை குறித்த ஜனாதிபதி குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, உலக வங்கியின் முன்னாள் பதில் தலைமை பொருளியலாளர் பேராசிரியர் சாந்த தேவராஜன் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆபிரிக்க திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ஷர்மினி குரே ஆகியோர் இந்த குழுவில் உள்ளடங்குவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

யும்? சாகி கால்லகே என்ற நபரின் முகநூல் கணக்கில், பொலிஸார், இராணுவத்தினரிடம் அடிவாங்க உள்ளனர் என பதிவிட்டுள்ளார்.

ஊடகங்களை தாக்கினர், நேரடி ஒளிபரப்புகளை தடை செய்தனர். ஊடகவியலாளர்களை தாக்கினர். இது மிகவும் பாரதூரமான நிலைமை. அடையாளம் தெரியாத குழுக்கள் என்பது அரச பயங்கரவாதம் வரை நீடித்து செல்லலாம்.

அரசாங்கம் என்ற வகையில் இதற்கு உடனடியாக பதிலளிக்க வேண்டும். நிலைமை இப்படி சென்றால், 88-89 ஆம் ஆண்டு காலத்தில் ஆயுதங்களை கொண்டு சாதாரண மக்களை பழிவாங்கினர். மக்களை கொன்றனர். எனது தந்தையையும் கொலை செய்தனர்.

அந்த நிலைமைக்கு கொண்டு செல்லும் வகையில் அரசியல் திரும்பலாம். இதனால், உரிய நடவடிக்கைகளை எடுத்து, ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக அரசாங்கத்திற்கு இருக்கும் கடமையை நிறைவேற்ற வேண்டும். துப்பாக்கிகளுடன் அடையாளம் தெரியாத குழுக்கள் நடமாட இடமளிக்க வேண்டாம் எனவும் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (ம)

### ராஜபக்ஷ...

என முன்னாள் மேல் மாகாண ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவருடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019ஆம் ஆண்டு மொட்டுக்கட்சி ஆரம்பமானது. இந்த கட்சியை எவ்வாறு பிரபலப்படுத்துவது என்பதே தற்போதைய அரசின் அன்றைய மனநிலை.

அப்பொழுது நல்லாட்சி அரசு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியது. பொருட்களின் விலை குறைவு உட்பட மக்களிடம் பணமும் இருந்தது. காசு அச்சிடவுமில்லை.

ஆனால் அரசு ஆட்சிக்கு வந்து மூன்று வருடமாகியும் எதுவும் செய்யமுடியவில்லை, அரசு இங்கே முழுக்க முழுக்க பிச்சை எடுக்கிறது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ம)


பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி
விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை (C-4130)
விசா சேவைகள் V2 TRAVELS
49A, சுப்பர் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

மாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

2021ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவி

இதயகரன் றிஷ்மியா
(யா/யாழ்ப்பாண கல்லூரி, புள்ளி 159)

மேலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற
யா/வட்டு மத்திய கல்லூரி மாணவி செந்தில்குமார் ஜென்சிகா
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி நிமலன் ஜீவனிஷா
ஆகியோரை

நேற்றைய முயற்சி இன்றைய வெற்றி
இன்றைய வெற்றி நாளை வரலாறு
இன்றும் என்றும் உங்கள் வெற்றிக்கு
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: மஹாலக்ஷ்மி, பொ.தனபாலசிங்கம்
மடத்துப்பிள்ளையார் கோவிலடி, தொல்புரம். (C-4134)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.